**<u>மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, நாகப்பட்டினம்</u>**

Notification No. DLSA/01/2025 Date: 29/09/2025
Ref. No. TNSLSA/4098/S3/2025, dated 24.09.2025

**<u>சட்ட தன்னார்வலர்கள் விண்ணப்பம் கோருவது சம்பந்தமான அறிவிப்பு</u>**

**<u>(Selection of Para Legal Volunteer)</u>**

நாகப்பட்டினம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் அதன் கீழ் இயங்கும் வட்ட சட்ட பணிக்குழுவிற்கு 39 "சட்ட தன்னார்வலர்கள்" (Para Legal Volunteer) தேர்வு செய்வதற்கு நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டும் கீழ்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. M.S.W. பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி பணியாளர்கள்
5. மருத்துவர்கள் (Doctors / Physicians)
6. மாணவர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் வரை)
7. சமூக சேவை புரியும் சமூக ஆர்வலர்கள் (அரசியல் அமைப்பு சாராத தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்கள்)
8. மகளிர் சுய உதவிக்குழுகள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளிர் குழுக்கள்
9. சிறைச்சாலைகளில் உள்ள நீண்ட கால தண்டனை அனுபவித்து படித்த மற்றும் நல்ல நடத்தை கொண்ட சிறைவாசிகள்
10. மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழுவால் சட்ட தன்னார்வலர்களாக (Para Legal Volunteer) அடையாளம் காணப்படுவதற்கு தகுதியானவர் என்று கருதப்படும் வேறு எந்த நபரும்

**<u>விண்ணப்பிக்கும் முறை</u>**

- விண்ணப்ப படிவங்கள் http://nagapattinam.dcourt.gov.in/ என்ற இணைய வழியில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் **'தலைவர் / மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், நாகப்பட்டினம்'** என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமோ **15.10.2025 மாலை 5.00 மணிக்குள்** சமர்பிக்கப்பட வேண்டும்.
- நேர்காணலுக்கான தேதி, இடம் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் தொலைபேசி மூலமாகவோ அல்லது http://nagapattinam.dcourt.gov.in/ என்ற இணைய வழியில் பின்னர் தெரிவிக்கப்படும்.

**<u>குறிப்பு:</u> மேற்கண்ட பணிக்கு சம்பளம், தொகுப்பு ஊதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது. சேவை மனபான்மை உள்ளவராக இருத்தல் வேண்டும், மதிப்பு ஊதியம் வழங்கப்படும்.**

**ஒம்./xxxxx,**
**தலைவர் / மாவட்ட நீதிபதி,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**நாகப்பட்டினம்.**

**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, நாகப்பட்டினம்**

**சட்ட தன்னார்வலர்களுக்கான விண்ணப்ப படிவம்**

விண்ணப்பதாரர் புகைப்படம் (சுய சான்றொப்பம் இடவும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | பாலினம் | : | |
| 5. | கல்வி மற்றும் தொழில் நுட்பத்தகுதி (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 6. | விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் | : | |
| 7. | நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 8. | தகவல் அனுப்ப வேண்டிய முகவரி, கைபேசி எண் மற்றும் இ-மெயில் முகவரி | : | |
| 9. | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 10. | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் | : | |
| 11. | விண்ணப்பிக்கும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அல்லது வட்ட சட்டப்பணிகள் குழுவின் பெயர் | : | |
| 12. | தங்களின் உறவினர்களில் யாரேனும் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களாக உள்ளனரா? | | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்

மேற்கண்ட விபரங்கள் யாவும் உண்மையென உறுதி கூறுகிறேன். மேலும் சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை, மாண்புமிகு தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் நன்கு அறிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்